

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

விழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 282 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 10 – ஞாயிற்றுக்கிழமை 24 மே 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 282 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 10 - Sunday 24 May 2026 - Dak 8 Pages ₹ 5.00


## த.வெ.க. அரசில் ஜோதிடரைத் தொடர்ந்து

## தேர்தல் வியூக நிபுணர்கள் ஆலோசகர்களாக நியமனம் !

## மீண்டும் சர்ச்சையில் சிக்கிய முதல்வர்!

சென்னை, மே 24 -

த.வெ.க. அரசு தேர்தல் வியூக நிபுணர் ஜான் ஆரோக்கியசாமி மற்றும் விஷ்ணு ரெட்டியை முதல்வர் விஜய்யின் ஆலோசகர்களாக நியமித்துள்ளது. ஏற்கனவே ஜோதிடர் நியமன சர்ச்சை வெடித்த நிலையில் புதிய ஆலோசகர் நியமனம் அரசியல் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

த.வெ.க. அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து சர்ச்சையை ஏற்படுத்தும் வகையில் முதல்வர் விஜய்யின் ஆலோசகர் நியமனங்கள் தொடர்ந்து அரங்கேறி வருகிறது. தேர்தல் வியூக நிபுணர்களாக அறியப்படும் ஜான் ஆரோக்கியசாமி மற்றும் விஷ்ணு ரெட்டி ஆகியோர் முதல்வரின் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது அரசியல் வட்டாரங்களில் விவாதத்தை கிளப்பியுள்ளது. ஏற்கனவே முதல்வர் விஜய்யின் அரசியல் பிரிவு சிறப்பு அதிகாரியாக பிரபல ஜோதிடர் ரிக்கி ரத்தன் பண்டிட் வெற்றிவேல் நியமிக்கப்பட்டதாக கடந்த மே 12ம் தேதி தகவல் வெளியானது.

தமிழக அரசு இதற்கான உத்தரவை பிறப்பித்த நிலையில், ஜோதிடருக்கு அரசு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாக கடுமையாக எதிர்ப்பு கிளம்பியது. சமூக வலைதளங்களிலும் இந்த நியமனம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. தொடர்ந்து எழுந்த விமர்சனங்களுக்கு பின்னர் அந்த உத்தரவு திரும்பப் பெறப்பட்டது.

இந்த சர்ச்சை அடங்காத சூழலிலேயே தற்போது புதிய ஆலோசகர் நியமனம் குறித்த தகவல்கள் வெளிவந்துள்ளன. அதன்படி, த.வெ.க. அரசின் தேர்தல் ஆலோசகராகவும், அரசியல் வியூக வகுப்பாளராகவும் செயல்பட்ட ஜான் ஆரோக்கியசாமி, முதல்வர் விஜய்யின் அரசியல் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதேபோல் நிர்வாகம், கொள்கை மற்றும் அரசியல் விவகாரங்களுக்கான ஆலோசகராக விஷ்ணு ரெட்டி நியமிக்கப்பட்டிருப்பது பல்வேறு கேள்விகளை எழுப்பி உள்ளன. தேர்தல் வியூக நிபுணர்களுக்கு தமிழக அரசு அமைப்பில் அதிகாரப்பூர்வ பங்கு வழங்கப்படுவது எந்தளவிற்கு நியாயம் என்ற விவாதம் சமூக வலைதளங்களில் தீவிரமடைந்துள்ளது.

## கோவையில் 10 வயது சிறுமி கடத்தி கொடூரக் கொலை!

# உண்மைக் குற்றவாளிகளுக்கு கடும் தண்டனையைப் பெற்றுத் தர வேண்டும்!

### சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, மே 24 -

**“கோவையில் 10 வயது சிறுமி கடத்திக் கொடூரக் கொலை செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தியிருக்கிறது. எனவே இந்த மிருகத் தனமான செயலைச் செய்த உண்மைக் குற்றவாளிகளுக்கு கடும் தண்டனையை விரைந்து பெற்றுத் தர வேண்டும்” என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் த.வெ.க. அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.**



இதுகுறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கோவையில் 10 வயது சிறுமி, கடத்தி கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தி இருக்கிறது. இந்தக் கொலைச் சம்பவத்துக்கு உண்மையான நீதி வேண்டும் என்ற குரல், எல்லாப் பக்கமும் ஒலிக்கிறது.

இந்தியா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கிற இந்தக் கொடூரச் சம்பவத்தைக் கண்டித்து, கோவை மக்கள் விடிய விடிய போராட்டம் நடத்துகிறார்கள். இந்த மிருகத்தனமான செயலைச் செய்த உண்மைக் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனையை விரைந்து பெற்றுத் தர வேண்டும்.

**சிறுமியின் பெற்றோருக்கு கழகம் துணையாக நிற்கும்!**

இந்த இக்கட்டான நேரத்தில், சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் தெரிவிப்பதோடு, கழகம் அவர்களுக்குத் துணையாக நிற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய அரசு பொறுப்பேற்றதிலிருந்து, 12 நாட்களில் பாலியல் வன்கொடுமை, கஞ்சா கடத்தல், ரவுடிகள் தாக்குதல், ஆளுங்கட்சியினரின் அத்துமீறிய அராஜகம், தற்போது கோவை சிறுமி கடத்தி கொலை உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட பெரிய நிகழ்வுகள் செய்திகளாக வந்து கொண்டே இருப்பது, மாநிலத்தின் சட்டம் ஒழுங்கை கேள்விக் குறியாக்கி உள்ளது.

இனி ஒரு சம்பவம் இதுபோல் நடக்காமல் இருக்க சட்டம் ஒழுங்கிற்கு முதல் முக்கியத்துவத்தை முதல்வர் தர வேண்டும் என தமிழ்நாட்டு மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## சிறுமி படுகொலை:

## முதல்வர் பொறுப்பேற்க வேண்டும்! பெற்றோர் வலியுறுத்தல்!

கோவை, மே 24 –

இந்தியா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கும் கோவை சிறுமியின் படுகொலைக்கு முதலமைச்சர் விஜய் பொறுப்பேற்க வேண்டும் என சிறுமியின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். காவல் துறையினர் முன்னுக்குப்பின் முரணான தகவல்களை தந்ததாகவும், சிறுமியின் குடும்பத்தினர் குற்றஞ் சாட்டினர்.

கோவை அருகே, வீட்டின் முன் விளையாடிக்கொண்டிருந்த சிறுமிக்கு சாக்லேட் வாங்கித் தருவதாகக்கூறி அழைத்துச்சென்று பாலியல் வன்கொடுமை செய்து படுகொலை செய்யப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த கொடூர சம்பவதற்கு முதலமைச்சர் விஜய் இதுவரை ஆறுதல் கூட தெரிவிக்கவில்லை. இந்த படுகொலைக்கு முதலமைச்சர் விஜய் பொறுப்பேற்க வேண்டும் என சிறுமியின் உறவினர்கள் வலியுறுத்தியுள்ளனர். விஜய் ஆட்சியில் நிகழும் குற்றச் சம்பவங்கள் மிகப்பெரிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் சிறுமியின் குடும்பத்தினர் குற்றஞ் சாட்டி யுள்ளனர். காவல்துறையினர் முன்னுக்குப்பின் முரணான தகவல்களை தந்ததாகவும், தங்களது குழந்தை உயிரோடு இருப்பதாக காவல்துறையினர் முதலில் கூறினர்; பின்னர் இறந்துவிட்டதாக கூறினர் என்று குடும்பத்தினர் குற்றஞ்சாட்டினர்.

## தமிழ்நாட்டையே உலுக்கிய சம்பவம்!

# கோவையில் பத்து வயது சிறுமி கடத்திக் கொடூரக் கொலை!

### த.வெ.க. பதவியேற்ற பத்து நாட்களிலேயே சட்டம் – ஒழுங்கு படும்பாடு!

சூலூர், மே 24 -

கோவையில் 5ம் வகுப்பு மாணவியை கடத்தி பலாத்காரம் செய்து கொடூரமாக கொன்று குளத்தில் வீசிய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கோவை மாவட்டம் சூலூர் அருகே உள்ளது பள்ளபாளையம். இங்குள்ள பாரதி புரத்தைச் சேர்ந்தவர்கள் தொழிலாளி தம்பதி. இத்தம்பதிக்கு 10 வயது மகள் உண்டு. இவர்கள் குடும்பத்துடன் கடந்த ஒரு வாரத்திற்கு முன்புதான் போத்தனூரில் இருந்து இங்கு குடியேறினர். தம்பதியின் மகள் போத்தனூர் பகுதியில் உள்ள பள்ளியில் கடந்த ஆண்டு நான்காம் வகுப்பு தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றார். அங்கிருந்து மாற்றுச் சான்றிதழ் வாங்கி வந்த நிலையில் ஐந்தாம் வகுப்பிற்கு கண்ணம்பாளையம் பள்ளியில் சேர்க்க பெற்றோர் முடிவு செய்தனர். இந்நிலையில், மாணவி நேற்று முன்தினம் 21ம் தேதி இரவு 7 மணி அளவில் அருகில் உள்ள கடைக்கு செல்வதாக கூறிச்சென்றார்.

அதன்பின், அவர் வீடு திரும்பவில்லை. அதிர்ச்சியடைந்த பெற்றோர் கடைக்கு சென்று விசாரித்தனர். அப்போது, ஒரு வாலிபர், மாணவியை பைக்கில் ஏற்றிச்சென்றதாக தகவல் கிடைத்தது.

இதனையடுத்து பெற்றோர் சூலூர் போலீசில் புகார் அளித்தனர். இது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். மேலும், எஸ்.பி. கார்த்திகேயன் உத்தரவின் பேரில் 5 தனிப்படைகள் அமைத்து மாணவியை தீவிரமாக தேடி வந்தனர்.

இந்நிலையில் அந்த பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி. கேமரா காட்சிகளை ஆராய்ந்தபோது மாணவியை கடத்தியது அதே பகுதியில் வசிக்கும் தொழிலாளி கார்த்திக் (33) என்பது தெரியவந்தது. அதன் அடிப்படையில், அவரை பிடித்து விசாரித்த போது அவர் முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்தார்.

தீவிர விசாரணையில் அவர் மாணவியை கடத்திச்சென்று பலாத்காரம் செய்து கொன்று விட்டதாகவும், உடலை வீட்டில் இருந்து 2 கி.மீ தூரத்தில் உள்ள கண்ணம்பாளையம் குளத்தில் வீசி விட்டதாகவும் தெரிவித்தார். இதனால், அதிர்ச்சியடைந்த போலீசார், மோப்ப நாய் உதவியுடன் சம்பவ இடத்துக்கு சென்றனர். அங்கு மாணவியின் சடலத்தை மீட்டனர். இதுகுறித்து தகவல் அறிந்ததும் எஸ்.பி. மற்றும் டி.ஐ.ஜி. சாமிநாதன் ஆகியோர் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை நடத்தினர்.

**காவல்நிலையம் முற்றுகை!**

இதனிடையே, மாணவியின் உடலை வாங்க மறுத்து பெற்றோர் மற்றும் உறவினர்கள் காவல்நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அங்கு பதற்றம் நிலவியது. அசம்பாவிதம் ஏற்படாமல் தடுக்க ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டனர். மாணவியை கடத்தி பலாத்காரம் செய்து கொடூரமாக கொன்று வீசிய சம்பவம் அந்த பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**கும்பல் வெறிச்செயலா?**

மாணவியை, கார்த்திக்தான் பலாத்காரம் செய்து கொன்று வீசினாரா? அல்லது கும்பலே இந்த கொடூர செயலில் ஈடுபட்டுள்ளதா? என்பதில் சந்தேகம் ஏற்பட்டது.

இதனையடுத்து கோவை இ.எஸ்.ஐ. மருத்துவமனைக்கு இது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. பிரேத பரிசோதனை செய்யும் மருத்துவக் குழுவினர் சடலத்தை தொடாமல் பாதுகாப்புடன் எடுத்து வரும்படி கூறினர்.

அதன்படி, மாணவியின் சடலத்தை போலீசார் பத்திரமாக மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். உடலை பெற்றோரிடம் காட்டாமல் கொண்டு செல்வதாக பெற்றோர் கதறி அழுது குற்றம் சாட்டினர்.

இதனையடுத்து காவல் நிலையம் முன் பெற்றோர், உறவினர்கள் மற்றும் 500க்கும் மேற்பட்டோர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

## கோவையில் சிறுமி கொலை:

## ‘ரீல்ஸ்’ ஆட்சியில் குழந்தைகளுக்குக் கூட பாதுகாப்பில்லை!

## தி.மு.க. மகளிர் அணி கண்டனம்!

சென்னை, மே 24 -

பிஞ்சுக் குழந்தைகளைக் கூட காப்பாற்ற முடியாத அளவுக்குத் தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு அடியோடு சீரழிந்துவிட்டதாக தி.மு.க. மகளிரணி குற்றம்சாட்டியுள்ளது.

தி.மு.க. மகளிரணி வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவில்,

த.வெ.க ஆட்சியில் பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் முழுமையான பாதுகாப்பு இருக்கும் என்று, மேடைகளில் விஜய் வீர வசனம் பேசியது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கோவை சூலூரில் கடத்தப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட 10 வயது பிஞ்சுச் சிறுமி, விஜய் அங்கிள் எங்க இருக்கீங்க? பெண் குழந்தைகளுக்கு இந்த ஆட்சியில் பாதுகாப்பு இல்லையா என்று கேள்வி எழுப்புவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கேள்விக்கு இப்போது என்ன பதில் சொல்லப்போகிறீர்கள் என்று முதலமைச்சர் விஜய்க்கு கேள்வி எழுப்பியுள்ள தி.மு.க. மகளிரணி, பிஞ்சுக் குழந்தைகளைக் கூட காப்பாற்ற முடியாத அளவுக்குத் தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு அடியோடு சீரழிந்துவிட்டதாக குற்றம் சாட்டியுள்ளது.

உங்களுடைய ‘மாற்றம்’ என்ன என்பதை ஒரே வாரத்தில் மக்களுக்கு உணர்த்திவிட்டீர்கள் என்றும் முதலமைச்சர் விஜயை தி.மு.க. மகளிரணி கடுமையாக விமர்சித்துள்ளது.

## கொள்முதல் செய்யாததால்

# 10 நாட்களாக டிராக்டரிலேயே காத்துக் கிடக்கும் நெல்மூட்டைகள்!

## ‘ரீல்ஸ்’ ஆட்சியின் அவலம்! விவசாயிகள் வேதனை!

திருவள்ளூர், மே 24 -

நெல் மூட்டைகளை கொள்முதல் செய்யாததால், 10 நாட்களாக டிராக்டரில் தேங்கிக் கிடக்கும் நெல்மூட்டைகள் வீணாகி வருவதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகே உள்ள தாமரைப்பாக்கம் நெல்கொள்முதல் மையத்திற்கு, புன்னப்பாக்கம், மாகரன், அமணம்பாக்கம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து, விவசாயிகள் 20க்கும் மேற்பட்ட டிராக்டர்களில் நெல் மூட்டைகளை கொண்டு வந்துள்ளனர். ஆனால், அங்கு ஏற்கனவே ஆயிரத்திற்கும் மேற்பட்ட மூட்டைகள் திறந்த வெளியில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் கொண்டு வந்துள்ள நெல் மூட்டைகளை அதிகாரிகள் கொள்முதல் செய்யவில்லை என தெரிகிறது.

இதனால், 10 நாட்களுக்கும் மேலாக டிராக்டரில் உள்ள நெல்மூட்டைகளுடன், விவசாயிகள் காத்துக்கிடக்கின்றனர்.

இதனால், நெல் மூட்டைகள் மழை, வெயில் போன்றவற்றால் நெல் மூட்டைகள் வீணாகி வருவதாகவும் வேதனை தெரிவித்தனர். மேலும், தினசரி டிராக்டர் வாடகையாக ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இதுகுறித்து விவசாயிகள் அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியபோது, புதிய ஆட்சி வந்துள்ளதால், நெல் கொள்முதல் செய்ய இதுவரை அனுமதி கிடைக்கவில்லை என தெரிவித்ததாக கூறினர்.

இதற்கிடையில், நெல் மூட்டைகளை அரசு கொள்முதல் செய்யும்போது எடை போடும் பணியில் உள்ள ஊழியர்களுக்கு ஒரு மூட்டைக்கு 40 ரூபாய் வசூலிக்கப்படுவதாகவும், தமிழ்நாடு முழுவதும் இந்த வசூல் நடைபெறுவதாகவும் விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

